## பன்னாட்டு மொழிகள் ஆண்டு-2008

பன்னாட்டு மொழிகள் ஆண்டாக 2008-ஆம் ஆண்டைக் கொண்டாடும் வகையில் யுனெஸ்கோ நிறுவனத்தின் தலைமை இயக்குநர் திரு மட்சூரா, விடுத்துள்ள செய்தி.


" மொழிகள் பொருட்படுத்தப்படவேண்டியவை! "

பன்னாட்டு மொழிகள் ஆண்டாக 2008-ஆம் ஆண்டை ஐக்கிய நாடுகளின் பொதுக்குழு அறிவித்துள்ளது. இந்த ஆண்டுக்கான நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் பணி யுனெஸ்கோ நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அந்நிறுவனம் ஒரு முனைப்பு இயக்கமாகச் செயல்பட்டு தன் பங்கினை நிறைவேற்றிட உறுதிபூண்டுள்ளது.

அடுத்த சில பத்தாண்டுகளில் மனிதகுலம் சந்திக்கவேண்டியிருக்கும் பல சவால்களை எதிர்கொள்ளும் வகையில் மொழிகள் ஆற்றவேண்டிய பணியை இந்நிறுவனம் நன்கு அறிந்துள்ளது.

குழுக்களையோ தனிநபரையோ அடையாளம் காட்டவும் அவற்றுக்கிடையே அமைதிச் சூழ்நிலை நிலவவும் மொழிகள் இன்றியமையாதவை. நீடித்த வளர்ச்சி நோக்கிய பாதையில் முன்னேறிச் செல்லவும் வட்டார அளவிலும் பூகோள அளவிலும் இணக்கமான உறவுகள் தழைக்கவும் அவை தலையாய காரணியாக விளங்குகின்றன.

அனைவருக்கும் கல்வி எனும் அறுநோக்கு கொள்கையை நிறைவேற்றவும் ஐக்கிய நாடுகள், 2000-ஆம் ஆண்டில் ஏற்றுக்கொண்டுள்ள புத்தாயிரம் ஆண்டுக்கான வளர்ச்சி இலக்குகளை எட்டவும் மொழிகள் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன. கொடிய வறுமையையும் பசிப்பிணியையும் போக்குவதற்கும் சமூகத்தை ஒருங்கிணைக்கும் காரணியாகவும் மொழிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

எழுத்தறிவு, கற்றல் மற்றும் வாழ்வுக்கு உதவும் திறன்கள் ஆகியவை கைகூடவும் அனைவருக்கும் தொடக்கக் கல்வி அளிப்பது சாத்தியமாவதற்கும் மொழிகள் இன்றியமையாதன. எச்ஐவி, எய்ட்ஸ், மலேரியா மற்றும் பிற நோய்களை ஒழிக்கும் பிரச்சாரப் பணிகள் மக்களைச் சென்றடைய வேண்டுமானால் அவை மக்கள் மொழிகள் வாயிலாகவே எடுத்துச் செல்லப்படவேன்டும். வட்டார அறிவு, நாட்டுவழக்காறு அறிவு மற்றும் செயல்திறன்களைப் பாதுகாக்கும் முயற்சி ஆகியன சுற்றுச்சூழல் தழைப்பதை உறுதிசெய்கின்றன; இவை வட்டார மற்றும் உள்நாட்டு மொழிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன.

மேலும் பண்பாட்டில் காணப்படும் வேற்றுமை, மொழிகளுக்கிடையே காணப்படும் வேற்றுமையோடு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது என்பதனை யுனெஸ்கோ நிறுவனம் 2001-ஆம் ஆண்டில் உலகிற்கு அறிவிப்பு செய்துள்ள பண்பாட்டு வேற்றுமை மற்றும் அதன் தொடர்புடைய செயல்திட்டத்தில் சுட்டிக்காட்டியுள்ளது; புலனாகா பண்பாட்டு உடைமையையும் பேணிப்பாதுகாக்க இது வழிசெய்கிறது. பண்பாட்டு வெளிப்பாடுகளில் காணப்படும் வேற்றுமைகளைப் போற்றிப் பாதுகாக்க 2005-ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட கூட்டத்தில் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

மேலும், அடுத்த சில தலைமுறைகளில் உலகத்தில் பேசப்படும் 7000 மொழிகளில் 50 விழுக்காடுக்கும் மேல் வழக்கொழிய இருக்கின்றன. இவற்றுள் கால் பங்கு மொழிகள் மட்டுமே இன்று பள்ளிகளிலும் தகவல்வெளியிலும் பயன்பட்டு வருகின்றன; பெரும்பாலான மொழிகள் மிகக் குறைவாகவே பயன்பாட்டில் உள்ளன. மொழியில் ஆளுமையுடன் அன்றாட வாழ்வில் பயன்படும் ஆயிரக்கணக்கான மொழிகள் கல்வி நிறுவனங்களிலும், ஊடகங்களிலும், அச்சுத்துறையிலும் பொதுமக்கள் கவனத்திலும் இடம்பெறாத நிலை இருக்கின்றது.

இத்தருணத்தில் நாம் விரைந்து எழுந்து ஆற்றவேண்டிய பணி இருக்கின்றது. அதனை எவ்வாறு மேற்கொள்வது? மொழிக்கொள்கைகளை உருவாக்கி ஒவ்வொரு மொழி சமூகத்தினரும் தங்கள் முதல்மொழியை அல்லது தாய்மொழியைக் கல்வி உட்பட அனைத்திலும் பரவலாகவும் பன்முறையும் பயன்படுத்த ஊக்கப்படுத்த வேண்டும். அதே வேளையில் தேசிய அல்லது மண்டல அல்லது பன்னாட்டு மொழிகளில் ஆளுமை பெறுதலும் வேண்டும். பெருவழக்குமிக்க மொழிகளைப் பேசுவோரை மற்றொரு தேசிய அல்லது மண்டல மொழியிலோ அல்லது ஒன்றிரண்டு பன்னாட்டு மொழிகளிலோ புலமைபெற ஊக்குவிக்க வேண்டும். பன்மொழிக் கொள்கையை முழுமையாக ஏற்றுக்கொண்டால் மட்டுமே இன்றைய பூவுலகில் அனைத்து மொழிகளுக்கும் உரிய இடம் கிட்டும்.

எனவே அரசுகளையும், ஐக்கியநாடுகள் நிறுவனங்களையும், மக்கள் சமூக அமைப்புகளையும், கல்வி நிறுவனங்களையும், தொழில்நுட்ப மன்றங்களையும் மற்றும் உரிமைகொண்டாடுவோரையும் தங்கள் நடவடிக்கைகளைப் பெருக்கி எல்லா மொழிகளுக்கும் மதிப்பளித்து அவற்றை வளர்த்திடவும் பாதுகாக்கவும் யுனெஸ்கோ நிறுவனம் அழைக்கின்றது. குறிப்பாக அழியும் தறுவாயிலுள்ள மொழிகளை தனிமுயற்சியாலோ கூட்டுமுயற்சியாலோ பேணிக்காத்திடல் வேண்டும்.

சமூக ஒருங்கிணைப்புக்கு ஒரு கருவியாக மொழிகளை வளர்த்திட திட்டங்கள் வகுத்து கல்வித்துறையிலோ தகவல்வெளியிலோ, படிப்புச்சூழலிலோ அழியும் நிலையிலுள்ள மொழிகளைப் பேணிக்காக்க முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். அவை பொருளாதாரத்திற்கும் மொழிக்கும் உள்ள தொடர்பை அல்லது வழிவழிவந்த அறிவிற்கும் மொழிக்கும் உள்ள தொடர்பை அல்லது படைப்பிற்கும் மொழிக்கும் உள்ள தொடர்பை வெளிக்கொணர்வதாக இருக்கலாம். “மொழிகள் பொருட்படுத்தப்படவேண்டியவை” எனும் கருத்தை எல்லாவிடங்களிலும் முன்னிலைப்படுத்துவதை முக்கிய நோக்கமாகக் கொள்ள வேண்டும்.

ஒன்பதாவது, பன்னாட்டு தாய்மொழி நாளான பிப்ரவரி 21, 2008-க்கு தனிச்சிறப்பு ஒன்று உண்டு; மொழிகளை முன்னிலைப்படுத்தும் நடவடிக்கைகளைத் தொடங்குவதற்குப் பொருத்தமான கெடுநாளாக இந்நாள் அமைகிறது.

கல்வி, நிருவாகம், சட்டம், பண்பாடு, ஊடகம், தகவல்வெளி, வாணிகம் ஆகிய துறைகளில் நாட்டு அளவில், மண்டல அளவில், பன்னாட்டு அளவில் பல்வேறு மொழிகளுக்குள்ள வேறுபாட்டு முக்கியத்துவத்தையும் பன்மொழிச்சிறப்பையும் உறுதிப்படுத்துவதே நம் முதன்மைக் குறிக்கோளாக இருத்தல் வேண்டும்.

திட்டமிட்ட வளர்ச்சி நோக்கிய இலக்குக்களை எட்ட பன்னாட்டு மொழி ஆண்டாகத் திகழும் 2008-ஆம் ஆண்டு ஓர் அரிய வாய்ப்பினை நல்கிடும்.

கொய்ச்சிரொ மட்சூரா,
05-11-2007